980

கொங்கு மலர்

கோவைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

மலர் க.	பவ-ஆண்டு. புரட்டாசித்திங்கள்	இதழ் சு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1945
MADRAS (படம்)

உள்ளுறை.

பக்கம்.

திருவஞ்சைக்களம்

1. கடவுள் வணக்கம் (செய்யுள்) 161
2. கொங்கு நாடு ,, 161
3. இன்பமும் துன்பமும் ,, 162
4. வண்டும் மலரும் ,, 163
5. கொங்கு நாட்டு அமைப்பு 164
6. வித்வான் வாசுதேவ முதலியார் அவர்கள் சரித்திரம் 167
7. நாடகத்தமிழ் 170
8. திருக்குறளும் சமரசமும் 174
9. கலிங்கத்துப் பரணியின் காலவாராய்ச்சி 177
10. வணங்காமுடிப் பல்லவராயன் 183
11. மதிப்புரை 192

ஆண்டுக்கட்டணம் ரூ. 1-8-0. தனிப்பிரதி அணு 0-2-0.

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்.

1. இராவ் சாகிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B. A., B. L., ஆசிரியர்.
2. திருவாளர் S. நடராஜன் அவர்கள் B. A. உதவி ஆசிரியர்.
3. இராவ்பகதூர் T. A. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் B. A., B. L. M. L. C.
4. திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A.
5. ,, R. சதாசிவம் பிள்ளை ,, B. A.
6. ,, T. V. சீனிவாசராகவாச்சாரியார் ,, B. A. (Retired Supd. of police.)
7. ,, C. S. சொக்கலிங்கம் பிள்ளை ,, பண்டிதர்.
8. ,, D. N. ஆறுமுகம் பிள்ளை ,, பண்டிதர்.
9. ,, துடிசைக்கிழார் சிதம்பரனார் ,,

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூ.	10	0	0
அரைப்பக்கத்திற்கு	,,	ரூ.	6	0	0
கால்பக்கத்திற்கு	,,	ரூ.	3	0	0
அட்டை 3-வது பக்கத்திற்கு	,,	ரூ.	15	0	0
அட்டை 4-வது பக்கத்திற்கு	,,	ரூ.	20	0	0

நீண்டகால விளம்பரஞ் செய்வோர் நேரில் எழுதிக் கேட்டுக் கொள்ளவும்.

ஆசிரியர்,
கொங்குமலர்,
கோவைத் தமிழ்ச்சங்கம்,
வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதி
திருக்காளத்தி

திருவாலங்காட்டு மூத்த திருப்பதி
திருக்காளத்தி

செய்யுட் பகுதி.

கடவுள் வணக்கம்.

நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினன் வீணையேந்தி
ஈட்டுந் துயரறுக்கும் எம்மான் இடம்போலும் இலைசூழ்கானில்
ஓட்டந் தரும்அருவி வீழும் விசைகாட்ட முந்தூழோசைச்
சேட்டார் மணிகள் அணியுந் திரைசேர்க்குந் திருநணவே.

—திருநணை என்ற பவாரிக்கூடல்.

—திருஞானசம்பந்தர் தேவாரம்.

கொங்கு நாடு.

தொல்விடைப் பாகர்பே ரூரின் சூழலின்
வில்கெழு மணிமுடி வேள்ளி யங்கிரி
நல்லெழி னன்முக நவிரம் பூந்துழாய்
மல்லலந் தொடைப்புயல் வண்ணன் மால்வரை.

(கிரிச்சருக்கம் செ 30)

கோலநன் மணிமுடி குலவி மார்பின்மூ
நூலணிந் துலகெலா நுகர்ந்து நின்றமால்
போலகல் விசும்பொரீஇப் பொலிவு கொண்டதோர்
மாலைவெள் ளருவிதாழ் வரைக மாகிரி.

(கிரிச்சருக்கம் செ 31)

ஆயதோர் கிரியுதக் கடுத்த சாரலின்
மாயவன சலமொன் றுண்டு வாயுதிக்
கேயநாற் குரோசமென் றிசைக்கு மாயிடைத்
தூயவெள் ளோதிமன் சுரும்பொன் றுண்டரோ.

(கிரிச்சருக்கம் செ 32)

உரைத்தகே ழலங்கிரிக் குதக்கி ஞெண்மலர்
விரைத்தடந் தாமரைப் பொகுட்டு வேதியன்
வரைத்தல மதன்குண பாலின் மாமறைச்
சிரத்துறை சிவனுருச் சிலம்பொன் றுண்டரோ.

(கிரிச்சருக்கம் செ 33)

—பழனிப்புராணம்.

புதுப்பாடல்.

மேகங்கள்.

1. மேகங்காள் வைகரையில் மேற்கிருந்து வடகுணபால்,
வேகந்தான் உற்றவராய் விடியலின்முன் செல்வீரே,
சாகந்தான் நீரின்றிச் சாகுந்தான் எனவுருகி
தாகந்தான் தீர்த்திடவோ தாமதியா தேகின்றீர்.

2. கொங்கர்நா டெல்லாமே குளிர்மழைதான் இல்லாதே
பங்கந்தான் படுவதையே பார்க்கவந்தான் வாரீரோ,
அங்கந்தான் வெளித்திருக்கும் அருஞ்சிறுமைத் தொகுதிகளாய்
மங்கித்தான் வருகின்றீர் மழையினைத்தான் தாரீரோ.

3. சிறுதுளியும் தரவல்லீர், சிற்றுணவும் தந்ததவீர்,
உறுமூலைகட் காறுதலை உற்றிடுவான் வந்தீரோ,
அறுதுளிக்குப் பதிலாக அருந்தென்றல் வீசிடவும்
முறுவலித்துச் சிலபயிர்கள் மூளைப்பிப்பான் செல்வீரோ.

4. வெற்றுரையால் ஈகைதனை வேட்டிடும்ஓர் செல்வன்போல்
குற்றுயிராம் பயிர்மூலைக்குக் குளிர்வளியைத் தந்தீரே,
வெற்றுரையும் மிடிதன்னுல் வெளியேக மாய்வதுபோல்
குற்றுயிரும் தவிப்பனவே கொடுந்தபனன் உதிக்கவுமே.

5. மேகங்காள், நும்மினத்தார் மேற்றிசையில் மிளிர்க்கின்றூர்,
தாகந்தான் இல்லார்க்கே சரமாரி பொழிகின்றூர்,
ஆகந்தான் சிறுத்தவீர், அணுகுவதில் பயனில்லை,
வேகந்தான் திரும்பிப்போய் உற்றூரை வாவழைமின்.

—கோவைக்கிழார்.

8–10–31 அன்று சிறு மேகங்கள் வானயாற்றிலிருந்து வடமேற்கே ஓடுவதைக்கண்டு எழுதியது.

மொழி பெயர்ப்பு.

*என்நெஞ்சே-என்அரசு.

(நொண்டிச்சிந்து)

என்மன மென்றனுக்கோர்—இராச்சியம்
என்பதுமொருதலை ஓர்ந்தனனற்
பன்னரும்பல் வளஞ்சேர்—பாங்கமை
பாருலகியல் பினிலளித்திடும்பேர்
இன்பமுந் தரவல்லதாய்—எண்ணும்
இகசுக மனைத்தினுமுயர் நலனுர்
இன்னய மிருத்தல்கண்டேன்—ஏவரும்
இவண்விழை யுறுபொருள் சிறிதுமில்லேன் (1)

இன்னண மாயினுமென்—உள்ளம்
இன்னமுங் கூர்நசை எய்திலதால்
மின்னிள மன்பகடும்—பொன்னின்
மிகுதியும் விறலெதிர் படையணியும்
புன்மனந் தேறுதற்குத்—தக்க
புலச்சொலும் விழியுணு மெழிலுருவும்
இன்னவைக் கெலாமடிமை—இல்லேன்
என்னெனிற் சாலுமென்மன மிவைக்கே (2)

பொங்கிடு மிகை கைத்தலும்—பல்கால்
பொருக்கென விவர்பவருடன் விழலும்
துங்கத்திலுறைபவரும்—துடித்துத்
துயர்வுறும் படிசெயும் துனிபெறலும்
இங்கியான் கண்ணுற்றேன்—திருநசை
இறைகொளு மவர்மிக வயர்ந்தடைவார்
அங்கவை யஞ்சிக்காப்பர்—அவைநிகர்
அல்லல்களென்மனம் பொறுக்கிலதே (3)

உள்ளது போதுமென்றன்—வாழ்விற்
குறுதுணையாமது போதியதாய்க்
கொள்ளற் பாலனவாம்—அவையலால்
குறைபொருள் மேன்மேல் நாடுகிலேன்
வள்ளிய பெருமிதத்தோ—டாட்சி
மருவிலன் எனக்கிலா வெப்பொருளும்
ஒள்ளக மெனக்களிக்கும்—அரசென
உளந்தருவதனைக் கொண்டொளிர்குவனுல் (4)

---

*Sir Edward Dyre ஆங்கிலத்தில் எழுதிய My Mind to me a Kingdom is என்பதின் மொழிபெயர்ப்பு.

சில்லோர் மிகையுறவே—பெற்றுந்
திருவினிலின்னமு மிரதியுற்றூர்
இல்லேன் ஒருசிறிதும்—யானினி
எதனையுமடையவும் நாடுகிலேன்
மல்லுற்றுமேழையவர்—இரப்பார்
வறிதுடையேன் செல்வனீவனவர்க்
கில்லெனலுண்டெற்கு—மிச்சம்
இதயநைவாரவர் யான்வாழ்வேன் (5)

மற்றவரூறுகண்டு—எள்ளியான்
மகிழ்கிலன்; பிறர்பெறுமூதியத்தைச்
சற்றும் வெறுக்கிலனென்—மனதைத்
தரணியிலுளதொரு சலனமுமேல்
எற்றுதென்றுமொரு—படித்தாய்
இருந்திடுமென்னிலை; பகைவர்பயம்
அற்றேன்; நண்பர்பலன்—எதிர்கிலன்;
அருவருத்திலன்வாழ்வை, முடிவுமஞ்சேன் (6)

இன்பத்தினிறைதன்னைக்—காம
வின்னிறைகொண்டு கணிப்பர்சிலர்
சிந்தையின் வலியாற்றம்—அறிவின்
திறமுறைப்பார் திரள்செல்வமவர்க்
கொன்றேமன்சரதம்;—தொகைசேர்
ஒண்டிறலவர்க் கொருவஞ்சமதி;
வன்மனமைதியுற்று—நிலையா
மன்னுதல் யான்பெறு மின்பமெலாம்; (7)

மெய்ந்நலம், கவலையின்மை—யிரண்டும்
மேதகு நிதியாம் தூயநெஞ்சே
மொய்யரண் பரிதாநம்—அளிக்க
முயல்கிலன் எவருமுவந்திடவே
செய்கிலன் பிழைமறைவில்—இனைய
செந்நெறிநிலை நின்றதிலிறப்பேன்
வையகமாந்தரெலாம்—என்போல்
மாணுளிர் நெறிசேர்ந்துய் கிலரோ! (8)

தமிழ்ப்புலவர், ஆர். ஏ. சுப்பிரமணியன் B. Sc.
சேலம்.

சரித்தப் பகுதி.

பண்டைய சரித்திரம்.

கிரிஸ்தவ சகாப்தத்திற்கு முந்தி 5 நூற்றாண்டுகள் அளவில் சரித்திர ஆரம்பகாலம் என்று கூறலாம். அதற்கு முந்திய விஷயங்களை தென்னாட்டு வரலாற்றைக் குறித்தமட்டில் சரித்திர பாகமாகக் கூறமுடியாது. கிரிஸ்தவ சகாப்தத்திற்கு முந்தி 5-ம் நூற்றாண்டில் ஜைன மதமும் பௌத்த மதமும் வடநாட்டில் ஸ்தாபிக்கப் பெற்றன. மகாவீர வர்த்தமானர் ஜைன மதத்தைப்போதித்தார். அதற்கு அடுத்தாற்போல் சித்தார்த்தர் பௌத்த மதத்தைப் போதித்தார். அன்று முதல் கொண்டு இவ்விருமதங்களும் நாடெங்கும் பரவ ஆரம்பித்தன. இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் தென்னாட்டிலும் அம்மதங்கள் பரவ ஆரம்பித்தன.

வடநாட்டில் மகத ராஜ்ஜியம் வெகு பிரபலமாக அப்போது இருந்தது. அங்கே நந்தர்கள் என்ற அரசர்கள் சக்கரவர்த்திகளாய் ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில் யவன நாட்டில் மாசிடோனியா பிரதேசத்தில் அலெக்ஸாண்டர் என்ற ஒரு பிரபல மன்னன் தோன்றி உலகம் முழுவதும் ஜெயிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கீழ் நாடுகளின் பேரில் படை எடுத்து வந்தான். பாரசீகம் முதலிய பல நாடுகளை வென்று சிந்து நதி கடந்து பாஞ்சாலத்தின் மீது படை எடுத்தான். அங்கே புரூரவன் என்ற இந்திய மன்னன் அவனை எதிர்த்துப் போர்செய்தான். புரூரவன் போரில் தோற்றாலும் வெகு பராக்கிரமத்தோடு போர் செய்ததினால் அவனை மெச்சி அவனுக்கு அரசை மீண்டும் அலெக்ஸாண்டர் கொடுத்தான். அக்காலத்தில் மிகப்பிரபலமாயிருந்த மகத ராஜ்ஜியத்தை ஜெயிக்கவேண்டுமென்பது அலெக்ஸாண்டருடைய எண்ணம். ஆனால் அவனுடைய போர்வீரர்கள் களைத்துப்போயிருந்தபடியாலும் தங்கள் சுய நாட்டு ஞாபகம் வந்துகொண்டிருந்தபடியாலும் போருக்குச் செல்ல மறுத்துவிட்டார்கள். ஆகையால் அலெக்ஸாண்டரும்

திரும்பிவிட்டான். அக்காலத்தில் மகத அரசவம்சத்தில் ஒரு தாதி புதல்வனை சந்திரகுப்தன் என்ற இளவரசன் சாணக்கியன் என்ற கபட மந்திரியின் சூழ்ச்சியினால் பட்டத்தைக் கவர்ந்தான். அது முதல் அவ்வம்சம் மௌரிய வம்சம் என்று அழைக்கப் பெற்றது. மகத ராஜ்ஜியமும் மிகப் பிரபலம் அடைந்தது. சந்திரகுப்தன் பேரன் அசோக வர்த்தனன் கி. மு. 272 முதல் 231 வரை அரசாண்டான். அச்சக்கரவர்த்தி உலகப்பிரசித்தி பெற்றவன். பௌத்த மதப்பிரவேசமாகி அம்மதத்தை நாடு முழுவதும் பரவச்செய்தவன். இந்திய தேசம் மாத்திரமேயன்றி இலங்கைக்கும் சீனாவுக்கும் சமய போதகர்களை அனுப்பி அச்சமயத்தைப் பரவச்செய்தான். அவன் காலத்தில் இந்திய தேசத்தில் பெரும்பான்மையான பாகம் அவன் குடைக்கீழ் இருந்தது. தன் குடிகள் எல்லோருக்கும் சன்மார்க்கம் போதிப்பதற்காக நீதிகளைக் கற்களில் பதித்து நாட்டில் பலபாகங்களிலும் நாட்டிவைத்தான். அவ்விதம் அசோகன் வெளியிட்ட கல் வெட்டுகளில் ஒன்று மைசூர்ப்பிரதேசத்து சித்திர துர்க்கம் ஜில்லாவில் சித்தாபுரத்தில் இருக்கிறது. ஆகவே அக்காலத்தில் அசோகனுடைய ராஜ்ஜியம் தக்ஷிண பீடபூமி முழுவதும் அடங்கியிருந்தது எனலாம். ஒருவேளை கொங்கு நாடும் அதற்குள் சேர்ந்திருக்கலாம். அல்லது அதன் எல்லையாக இருந்திருக்கலாம். இந்நாட்டின் பெரும் பாகம் அக்காலத்தில் காடடர்ந்த பிரதேசமாக இருந்தது. ஏதோ சிற்சில பாகங்கள் மட்டும் குடிவளம் பெற்றிருக்கலாம் சிற்சில மலைகளை அரண்களாகக்கொண்டு சில குறுநில மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். இவர்கள் பெரும்பாலும தனி அரசுகளாகவே ஆண்டிருக்கலாம்.

அசோக வர்த்தனன் கி. மு. 231-ல் இறந்தான். அவனுக்குப் பின் மகத ராஜ்ஜியத்தின் சீர் குலைய ஆரம்பித்தது. ஆனால் பௌத்த மதம் பெருகிக்கொண்டே வந்தது. அவ்வரசன் காலம் முதல் கொண்டே பௌத்த மதாசாரியர்கள் தெற்கே வர ஆரம்பித்தனர். அவ்விதமாகவே சமண மதாசாரியர்களும் தென்னாடுகளில் பிரவேசித்தார்கள். பௌத்த மதத்தில் பிட்சுக்கள் என்ற சந்நியாசிகள் முக்கியமானவர்கள். ஆனால் சமண மதத்தில் சில

வணர்கள் என்ற தவமுனிவர்கள் முக்கியஸ்தர்கள். இத்தவமுனிகள் கல்வியில் சிறந்தவர்கள். ஞானத்தைப் பெறவேண்டி எப்போதும் தவம்புரிந்து வருவார்கள் உடலின் சுகங்களை சிறிதேனும் போற்றாது உண்டி சுருக்கித் தவத்திலேயே காலம் கழிப்பார்கள். ஜனக் கூட்டம் உள்ள ஊர்களை புறக்கணித்து ஆரண்யங்களில் தங்குவார்கள். யாரும் எளிதில் எட்டக்கூடாத மலைச்சிகரங்களை வாசஸ்தலங்களாகக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தவத்தை எவரும் கலைக்க முடியாதபடி பாதுகாத்துக்கொள்வார்கள். மலைச்சிகரங்களில் குகைகள் தோண்டி அவைகளில் தவம் புரிந்துவருவார்கள். அல்லது இயற்கையாய் இருக்கும் குகைகளில் வசிப்பார்கள். அவ்விதக்குகைகளில் தவம் செய்வதற்காக ஆசனங்களைச் செதுக்கி வைப்பார்கள். அவர்கள் படுப்பதற்காக படுக்கைபோலப் பாறைகளைச் செதுக்கிக்கொள்வார்கள். இவ்விதமான பாறைகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் இருக்கின்றன சில குகைகளில் அக்காலத்தில் வழங்கி வந்த எழுத்துக்களால் எழுத்துக்களை வெட்டியும் வைத்திருக்கின்றார்கள் அவ்வெழுத்துக்களைக்கொண்டு அருமையான செய்திகளை நாம் அறியக்கூடும். இவ்வித பாறைகள் நமது மக்கள் பஞ்சபாண்டவர் படுகை என்று சொல்லுகிறார்கள்:

பாண்டிய நாட்டில் மதுரையைச்சுற்றி எட்டு குன்றுகளில் இவ்விதப் படுக்கைகள் இருக்கின்றன. அவைகள் சமணர்களுடைய வாசஸ்தலங்கள் என்று அறியவேண்டும். இதனை சம்பந்த சுவாமிகள்

> "ஆனைமா மலை ஆதியாய இடங்களில் பல அல்லர் சேர்
> ஈசனர்கட்கு எளியேன் அலேன்"

என்று அடிகளில் கூறியிருக்கின்றார். இவ்வெட்டு மலைகளை எண்பெரும் குன்றம் என்று பெரிய புராணமும் திருவிளையாடற் புராணமும் கூறுகின்றன. தற்காலத்தில் சமணர்களுடைய நினைவுபோய் அவைகளை பஞ்ச பாண்டவர்களோடு இணைத்துவிட்டார்கள். பாண்டவர்களுக்கும் சமணர் தவப்படுக்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மதுரையைச்சுற்றிலும் மாத்திரமேயன்றி திருநெல்வேலி ஜில்லாவில் கழுகுமலையில் அநேக சமணர் சின்னங்கள் இருக்கின்றன. நமது கொங்கு நாட்டிலோ கரூர் தாலூக்காவில் புகலூருக்கு அருகில் உள்ள *ஆறுநாட்டார் மலையில் சிலகுகைகள் இருக்கின்றன.

---

*ஆறு நாட்டார் மலை என்பது புகலூர் ஸ்டேஷனுக்கு வடக்கே 3 மைல் தூரத்தில் உள்ள வேலாயுதம்பாளையத்திற்கு அருகில் காவேரி ஆற்றிற்குத் தெற்கில் உள்ள புகழிமலை எனப் பெயர்பெற்றது. இதற்கு திருப்புகழ் உண்டு.

அவைகள் இயற்கையான குகைகள். அவைகளில் சில சற் படுக் கைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் காணும் கல் வெட்டுகளிலிருந்து கி. மு. 3-வது நூற்றாண்டில் அவை எழுதப் பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஒரு கல்வெட்டில் சில மைல்களுக்கு அப்பால் உள்ள கருவூரிலிருந்த ஒரு தட்டானைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அக்காலத்தில் கருவூர் ஒரு முக்கிய ஊராக இருந்திருக்கவேண்டும். இக் குகைகளில் சமணரோ அல்லது பௌத்த சந்நியாசிகளோ அக்காலத்தில் இருந் திருக்கலாம்.

மேலே சொல்லிய குகைக் கல்வெட்டுகள் ஏற்பட்ட காலத்தில் தான் சமண சமயாசிரியர் ஹரிசேனர் என்பவர் பிரஹத் கதா கோசம் என்ற நூலை எழுதி இருக்கின்றார். அந்நூலில் ஒரு ஜைன சங்கத்து அங்கத்தினர்கள் தெற்கே சென்று புன்னாட தேசத்தை அடைந்தார் என்று கண்டிருக்கிறது. புன்னாட தேசம் என்பது மைசூர் பிரதேசத்திற்கு தென் மேற்கில் இருந்தது. அந்நாட்டில் கோமேதகங்கள் கிடைத்ததாகத் தாலமி என்ற ஆசிரியர் கி. பி. 2 வது நூற்றாண்டில் எழுதியிருக்கின்றார். கல்வெட்டுகளில் புன் னாட தேசத்துத் தலைமை நகர் கித்திபுரம் என்று அறிகிறோம். தற்போது கப்பினி நதியின் தீரத்தில் உள்ள கித்தூர் என்ற ஊர் தான் அத்தலைநகர் என்று ஊகிக்கிறார்கள்.

மேலும் பழனி தாலுகாவில் ஐவர் மலை என்ற ஒரு குன்று இருக்கின்றது. இதில் ஒரு பாறையின் கீழ் பஞ்ச பாண்டவர் படுக்கைகள் இருக்கின்றன. அவைகளும் சமண முனிவர்களுடைய மடங்களாக இருந்திருக்கலாம். உடமலைப்பேட்டைத் தாலுக்காவில் திரிமூர்த்திமலை அடிவாரத்தில் ஒரு பெரிய உருண்டைப் பாறை இருக்கின்றது. அதில் ஒரு சமண தீர்த்தங்கரர் உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. அதனை அறியாதார் மும்மூர்த்திகளின் உருவம் என்று ஆராதிக்கின்றனர். கொங்கு நாட்டைச் சேர்ந்த சேலம் ஜில்லாவில் திருச்செங்கோட்டு மலையில் அர்த்தநாரீசுவரர் ஆலயத் திற்கு மேலே ஒரு இயற்கைக் குகையும் அதில் நான்கு ஐந்து படுக்கைகளும் இருக்கின்றன. இவைகளும் சமண முனிவர்களது படுக்கைகளே. இவைகளால் கிரிஸ்து சகாப்தத்திற்கு முந்தி கொங்கு நாட்டில் சமணமதம் இருந்த நிலையை அறியலாம்.

—கோவைக்கிழார்.

வித்வான் வாசுதேவ முதலியார் அவர்கள் சரித்திரம்.

236-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

பவாநிப்புராணம்.

இப்புராணம் சிறந்த செய்யுள் நடையில் சொல் நடையும் பொருள் நடையும் விளங்க இயற்றப்பட்டிருக்கிறது. காவேரியும் பவாநியும் கூடும்படியான இந்தஇடத்தில் முற்காலத்தில் இலந்தை வனம் இருந்ததாகவும் அதனல் அதற்கு பதரிகாச்சிரமம் என்ற பெயர் வந்ததெனவும் சொல்லப்பட்டிருக்கிறது. வடக்கே இமய மலையில் இருக்கும் பதரிகாச்சிரமத்தைப் போலவே இது தெற்கே வுள்ள தக்ஷிணபதரிகாச்சிரமம் என்று பெயர் பெற்றிருக்கிறது. காவேரி, பவாநி என்ற இரண்டும் கூடுகிற இடத்தில் அமுதநதி அந்தர்வாகினி ஆக சேர்வதால் இது தக்ஷிணப்பிரயாகை அல்லது தக்ஷிண திருவேணி சங்கமம் என்ற பெயர் பெற்றதாம். சம்பந்த சுவாமிகளின் தேவாரத்தில் இத்தலம் திருநணை என்று கூறப்பட் டுள்ளது. அதன் விரிவு திருநண்ணூர் என்பதாம். தரிசித்தோர் க்கு யாதொரு தீங்கும் நண்ணுத தலமாகையால் நண்ணூர் என்று பெயர் வந்தது. இத்தலத்தைச்சுற்றி பத்மகிரி, சங்ககிரி (சங்ககிரி துர்க்கம்,) நாககிரி (திருச்செங்கோடு அல்லது கொடிமாடச் செங் குன்றூர்) மங்களகிரி, வேதகிரி (ஊராய்ச்சிக்கோட்டைமலை) என்ற பஞ்சகிரிகள் உண்டு இக்கிரிகளினுடைய விவரங்கள் இப்புராணத் தில் காணலாம்.

பவாநியைச்சுற்றி ஐந்து துர்க்கை ஆலயங்கள் உண்டு. அத் துர்க்கைகளில் வீரை என்ற துர்க்கை பவாநியின் கிழக்குத்திக்கில் ஆலயம் கொண்டிருக்கிறுள். இக்காலத்தில் இவ்வீரையை கோட்டை மேட்டு பத்திரகாளி என்பார்கள். இவ்வாலயம் காவேரிக்குக்கிழக்கே யிருக்கிறது. ஜெயந்தி என்னும் துர்க்கை பவாநியின் தெற்குத்திக் கில் காவல் புரிகிறுள். மார்த்தனி என்னும் காளி பவாநியின் மேற்குத்திக்கில் காவல் புரிகிறுள். சண்டகாதனி என்னும் காளி பவாநியின் வடக்குத்திக்கில் காவல் புரிகிறுள். இந்நான்கு காளி

களும் இவ்வூரின் எல்லை தேவதைகளாக ஏற்பட்டிருப்பதைக் குறித்த வரலாறு வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. திருமாலிடமிருந்து எஞ்சிய அமிர்தத்தை பராசரமுனிவர் கொண்டுவந்து இத்தலத்தில் வைக்க அதனைக் கவருவதற்கு நான்கு அசுரர்கள் வந்தார்களாம். முனிவர் அருட்சத்தியாகிய வேதாம்பிகையிடம் முறையிட வேதாம்பிகை அருளால் முன்கூறிய நான்கு காளிகளும் அவ்வசுரர்களைக்கொன்று சத்தியினுடைய ஆணைப்படி இத்தலத்து நான்கு திக்குகளிலும் காவல் புரிகிறார்களாம் என்பது வரலாறு.

இத்தலத்திலுள்ள மற்ற தீர்த்தங்கள், மூர்த்திகள் இவைகளைப் பற்றிய வேறு கதைகளும் கூறப்பெற்றுள்ளன. இறுதியில் சிவார்ச்சனையைப்பற்றிய சர்க்கத்தில் சிவபூசை விவரங்கள் சொல்லப் பெற்றுள்ளன.

3. திருப்பேரூர் பச்சைநாயகியம்மன் பந்தடி:—

இந்நூலை நமது வித்வான் பேரூரில் எழுந்தருளியிருந்த போது பாடியிருக்கின்றார் இதில் ஒன்று முதல் பத்து பந்துகள் வரை அம்மையார் விளையாடியதாக உட்கொண்டு கலிப்பாவும் ஆசிரியப்பாவுமாக இருபது பாட்டுக்கள் அடங்கியது. இந்நூலை சென்ற பிரபவ வருஷம் பங்குனி மாதத்தில் கோயமுத்தூர் வித்வான் கந்தசாமி முதலியார் அவர்கள் பரிசோதித்து அச்சடித்துள்ளார்கள். இந்நூலை அச்சடிப்பித்தபோது பலபுலவர்கள் சாற்றுக்கவிகள் கொடுத்துள்ளார்கள். அவைகளில் குட்டியாண்ணு முதலியார் இயற்றிய பாட்டை முன்னமே குறித்துள்ளோம்.

இப்பிரபந்தத்தில் செய்யுள்கள் மிகவும் லலிதமாகவும் பொருட் சிறப்புகொண்டதாகவும் இருக்கின்றன. சந்தப்பாக்கள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. ஆசிரியப் பாட்டுகளின் சந்தம் பந்தடிக்கும் விளையாட்டுக்கு ஏற்றதாக எதுகைத்தொடையாக அமைந்து ஒவ்வொரு பாட்டிலும் முன்னிரண்டடிகள் பெருமானது வருணனையும் பின்னிரண்டு அடிகள் அம்பிகை வருணனையும் ஆக உள்ளன. இவைகளுக்கு இரண்டு உதாரணம் தருவோம்.

காப்பு.

தேமேவும் பேரைநகர்ச் செல்விபச்சை நாயகிமேற்
பாமேவும் பந்தடியாம் பாடுதற்கு — நாமேவும்
பைந்தமிழைத் தந்தருளும் பட்டிக் கணபதிதன்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

நூல்.

செயச வுந்தர — விடையினன் — மதி
யயமி ருந்தொளிர் — சடையினன்
தேவர் சிந்தைசெய் — சோதியான் — சிவ
காம சுந்தரி — பதியான்.

வயமு றும்பர — சார்கையான் — செழுங்
கயலு றும்பிரை — யாகையான்
வரங்கொள் பேரை — நகரினன் — உயர்
திரங்கொள் சீர்கள் தழைக்கவே.

பயிலு மோதிமா நடையினள் — மயில்
இயலுஞ் சாயன்மின் — இடையினள்
பங்கே ருகப்பொற் — கழலினள் — மிகுங்
கொங்கே யிருக்கும் — குழலினள்.

கயல னிவனே — சிலம்பவே — குழல்
வயில றுபதம் — புலம்பவே
கதிக்ரு மக — தாம்பிகை — யன்பர்
துதிக்க வொருபந் தாடினள்.

கலிப்பா

சீர்மேவு காஞ்சி நதி சீரமுள்ள பேரைவளர்
தார்மேவு பட்டிலிங்க சங்கரனர் பங்கிலுறை
கார்மேவு பைங்கூந்தற் கன்னிபச்சை நாயகியாள்
ஏர்மேவு பெண்களுட னிசைந்தொருபந் தாடினளே.

மாயனுக் கழ — லூட்டினன் — தமிழ்க்
கீரனுக் கருள் — காட்டினன்
மருத்த நேமிக் — குழலினன் — மெழு
வெடுத்த ஞானக் — கழலினன்.

மேருவைச் சிலே — யாக்கினை — னடி
யாரகத்துயர் — போக்கினன்
விளங்கும் பேரை — நகரினன் — திரு
வளங்கொள் சீர்கள் தழைக்கவே.

யாரணத்துறு — நிலையினுள் — வளர்
பூரணச்செழுங் — கலையினுள்
அணிகொள் ஞானச் — சித்திரனுள் — அன்பர்
பணியும் மேன்மை — வரத்தினுள்.

வாரணத்தருள் முகையின் மேன்மணி
யார முத்திக — ளலையவே
வாலசுந்தரி — மரகதாம்பிகை
மகிழ்வோ டாறுபக் காடினுள்.

4. அவிநாசிக் கருணாம்பிகை சதகம்.

இப்பிரபந்தத்தை முதலியார் அவர்கள் அவிநாசியில் எழுந் தருளியபோது பெருங்கருணையம்மன் மீது பாடியதாகும். இந்நூல் திருவேங்கிடசதகம், குமரேசசதகம், அரம்பளீசுவர சதகம் முதலி யவை போன்ற ஒரு சதகமாகும். இந்நூல் கருணையச் செல்வியை முன்னிலைப் படுத்திப் பலநீதிகளை உட்புகுத்திப்பாடியதோர் நூலா கும். இந்நூலில் மகுடமாக "கங்காகுலன்-சுப்பிரமணியன் மனமக லாத கருணையச் செல்வியே" என்பதை ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் வைத்துப் பாடியிருக்கின்றார். இதனால் அக்காலத்தில் கங்கைகுல வேளாளரில் சுப்பிரமணியன் என்ற பேருடைய ஒரு பிரபு இருந்தார் என்றும் அவர் அவிநாசிக் கருணையச் செல்வி யிடம் மிகுந்த பக்தி மேலிட்டு இருந்தார் என்றும் அப்பிரபுவினு டைய வேண்டுகோளின்படி இச்சதகத்தை நமது வித்வான் பாடி யிருக்கின்றார் என்றும் அறிகிறோம். இவ்விதம் ஒரு பிரபுவினுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவரால் பரிசு பெற்று அவருடைய பெயரை செய்யுள்களில் புகுத்தி நூல்பாடுவது அக்கால வழக்கு போலும். உதாரணமாக முன்சொன்ன அரப்பளீசுவர சதகத்தில் மதவேள் என்றும், மருதாசலமூர்த்தி சதகத்தில் "மாதரசர் மேவும் நஞ்சப்பன் மனமகலாத மருதாசலக் குமரனே" என்று இருப்பது வும் காண்க. (மருதாசலம் என்ற மருதமலை கோவைக்கு 7-கல் அள வில்உள்ள ஒரு புண்ணியத்தலம்.)

இக்கருணும்பிகை சதகத்தில் பாடல்கள் மிகத் தெளிவாகவும் எளிதில் பொருள் அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றன. இரண்டு உதாரணங்கள் இங்கே கூறுவோம்.

குருடனுக்குதவி தன்கையிற் பிடித்தகோல்
குலமகட்குதவி கற்பாம்
கொண்டல்சொரி மழையினுல் நிறை குளமதற்குதவி
கோடுபெறவிட்ட கடைகால்

மருவிசெயும் பயிரினுக்குதவி பலவாவி நேர்
வாய்மொழிக்குதவி நளினம்
வளமுறச்செய் தன்மத்தினுக்குதவி யுண்
மகிழ்ந்து புகழாதிருத்தல்

உரிய உடலுக்குதவி வேளைதப்பாத வுண்
உயிரினுக்குஇனிய உதவி
யுந்தன் இருபாதார விந்தத்தில் அர்ச்சனைசெய்
யுதவியே யுதவி யென்பார்

கருடர் கந்தருவர் கிம்புருடர் வித்தியாதரர்கள்
கண்டுதுதி செய்யுமணியே
கங்காகுலன் சுப்பிரமணியன் மனமகலாத
கருணையச் செல்வியே செ. 35.

தாவியதாங்கப் பயோததி கடைந்தமுது
தந்த மாரீயந்தென்ன
தவழுமலை மூவுலகளாவி வருதொண்ணூற்
றமிழ்க்கடல் தனைக்கடைந்தே

நாவினெடு செவிமனது மின்பமுற உலகான்
ருளும் துதிக்கவேண்டி
நளினப்பிரசங்க கவிராஜ பூசித குன்றை
நகர் வாசுதேவதீரன்

ஆவலொடு வாரித்திரட்டி ஈய்ந்திடு மமுத
மான இச்சதக மூரைசெய
யபுரூப நீதி நெறி முறைமை வழுவாத பே
ரன்பன் மெய்த்தொண்டை நாடன்

காவியம்புயன் மிக்க பாகைநகர் மேவு சங்கர
மூர்த்தியருள் சுபுத்திரன்
கங்காகுலன் சுப்பிரமணியன் மனமகலாத
கருணையச் செல்வியே செ. 101.

5. திருப்பேரூர் கண்ணுடி விடுதூது.

இந்நூல் இன்னும் அச்சில்வெளிவரவில்லை. இதனை நமது வித்வான் வாசுதேவ முதலியார் பாடியதாகச் சொல்வர். ஆனால் அதை நிச்சயமாகச் சொல்வதற்கு ஆதாரமில்லை. கர்ணபரம்பரையைக் கொண்டு நம் முதலியார் தான் ஆசிரியர் என்று ஊகிக்கலாம்.

இந்நூலில் 158 கண்ணிகள் உண்டு. இது கலிவெண்பாவால் இயற்றப் பெற்றிருக்கிறது. இந்நூலில் வடமொழிகளை பக்குவமாக பிரயோகித்திருப்பதை கவனிக்கலாம். கண்ணுடியை தூதுவனாக கொண்டு ஒரு நூல் இயற்றியது மிகவும் அற்புதமான மனப்போக்கு என்று சொல்லவேண்டும். இனி அந்நூலில் கண்ட சில அடிகளை உதாரணமாகக் கூறுவோம்.

கார்போலு மேனியனுங் கஞ்சமலர் புங்கவனும்
பார்கீண்டும் விண்பறந்தும் பன்னெடுநாள் — ஆர்வமுடன்
தேடி வருந்தித் திரிந்துந் தெரியாமல்
நீடு சுடர்வடிவாய் நின்றருள்வோன் — பீடுடைய
தக்கன் சிரத்தைத் தகர்த்துத் தகர்ச்சிரத்தை
மிக்கத் திருத்தும் விறலாளன் — இக்குதனுக்
காமாரி சூலதரன் காரிலகு கந்தரத்தன்
தீமைப் புரத்தைச் சிரித்தெரித்த — கோமான்.....

பேதை மரகதமாம் பெண்ணேத்தன் மெய்யிலொரு
பாதியிலே வைத்துவந்த பட்டீசன் — நீதனுகாப்
பேரை நகர்வாழும் பெருமான்றன் மெய்யழகோர்
காரணமா யுன்னிடத்தே காணுதலும் — சீரிலகு
சுந்தரங்க ளெல்லாந் தொகுப்பி லொருவடிவாய்ச்
சுந்தரைக் காட்டுந் தொழிலாடி! — யந்தரத்தில்
அம்புவியி லுள்ளபொரு ளத்தனையு நீயாடிற்
கம்பிதஞ்செய் வித்திடுவாய் கஞ்சனமே!— .....
இரசமுடன் சேர்ந்திருப்ப தென்றறியா ருன்னை
நிரசமெனச் சொல்லுமது நேரோ— .....
சுத்த தருப்பணமே! தூயவொளி வட்டமே!
அத்தமே! கஞ்சனமே! யாடியே! — தித்திபடி
மக்கலமே! யாசை வழுத்து முகுரமே!
மிக்க வருத்தமெலாம் விள்ளுதற்குத் — தக்கவனே
நீயன்றி வேறுலகில் நேசத்தா ரில்லையெங்கள்
நாயகன்முன் நீசென்று நண்ணுவையேல் — ஆயிழையாள்
பாலையான் பால்காட்டிப் பானுவிழித் தன்னேமதி
போலவே காட்டியதாற் போதியில்வாழ் — மேலவன்முன்
அன்றுசெயுஞ் சித்துவினை யாடலைப்போ லேநீயும்
இன்றுசெய்தா யென்றுமிக வின்புறுவான் — சென்றதிலுல்
வெல்வாய் மருமாலை மேலவன்முன் றந்திடவே
சொல்வாய்கண் ணுடியே தூது.

6. திருப்பேரூர் விளக்குவிடுதூது.

இந்நூலும் மேலே சொல்லியதைப்போல இன்னும் அச்சாகவில்லை. ஏட்டுப்பிரதியும் முழுவதும் கிடைக்கவில்லை. இதையும் வாசுதேவ முதலியார் இயற்றியதாகச் சொல்லுவது கர்ண பரம்பரையே. விளக்கை தூதுவனுகக்கொண்டு ஒரு பிரபந்தம் பாடுவது ஒரு புதிய எண்ணமே. இதற்கு உதாரணமாக சில அடிகளை எடுத்துக்கொள்வோம்.

உலகமெனு மாமடந்தை யொண்ணுதலிற் றீட்டுந்
திலகமெனும் பேரூர்வாழ் தேவன் — அலகையுடன்
ஆடும் பரம னரவுமதி சூகரத்தின்
கோடு கடுக்கைகதி கூவிளந்தார் — சூடுங்
கறைமிடற்றன் முப்புரத்தைக் காய்ந்தவன்மா தேவன்
மறலியைச்செற் றேனெழிற்கா மாரி — யிறைவன்
மரலயன் மாங் காணு வடிவ னருணதன்
மலையையொரு வில்லாய் வளைத்தோன் — கொலைமழுவு
மானுந் தமருகமும் வான்சிரமும் மூவிலைவேல்
தானுமெடுத் தேந்துகரன் முழ்சடையன் — தேனுதரு
பாலின் விருப்புடையன் பச்சையுமை தன்னையொரு
பாலின் விருப்புடைய பட்டீசன்— .....

7. பவனி விலாசம்.

இந்நூலைப்பற்றியும் ஆக்கியோன் பெயர் நிச்சயமாகத் தெரிய வில்லை. ஆனல் அதனையும் நமது முதலியார் பாடியதாகச் சொல்லு வர். கோவைக்கடுத்த மருதமலையில் கோவன்பதி சரவணப் பெரு மாள் பிள்ளை என்பவர் கட்டின மண்டபப் பிரதிஷ்டையின்போது பவனி விலாசம் என்ற இந்நூல் இயற்றப்பட்டதாகத்தெரிகிறது. இதில் மன்னு சுக்கில என்று குறித்திருக்கிறபடியால் இந்நூலும் இன்றைக்கு ஏறக்குறைய 120 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது என அறிகிறோம்.

மேலே கூறிய நூல்களைத் தவிர வேறு நூல்களோ அல்லது தனிப்பாடல்களோ இயற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அவ்விதம் இயற்றியிருந்ததால் அவைகளையும் மற்றும் நமது வித்வான் அவர் களது வாழ்நாட் குறிப்புகளையும் அறிந்தவர்கள் தெரிவித்தால் நல மாக இருக்கும்.

— கோவைக்கிழார்.

கலைப் பகுதி.

சத்துப் பொருள்கள் அல்லது வைட்டமின்ஸ்.
(Vitamins.)

1. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்," "உடம்பார் அழியில் உயிரார் அழிவர்," "சுவரை வைத்தன்றே சித்திரம் எழுதல் வேண்டும்," என்பன போன்ற முதுமொழிகள் நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவருவனவாம். எனினும் நம் மக்களின் தற்கால உடல் நலப்பயிற்சி அறிவும், உடலைப் பேணிவரும் நிலையும் நம்மைத் தலைகுனியச் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றனவெனின் மிகையாகாது.

2. பண்டைப் பெருமையைப் பேசிப்பேசி வீண்காலம் கழிப்பதற்கு இரங்குதல் நேர்மையேயெனினும் பண்டைப் பெருமையை யுணர்தல் வருங்காலத்தில் விரைவாக ஈடேற உறுதுணையாதல்பற்றி நாம் அதைச் சிந்தித்தல் கடனேயாம்.

3. உடலை வளமுற வளர்ப்பது உணவு. நாம் எவ்வெப் பொழுது என்னென்ன ஆகாராதிகளை உட்கொள்ள வேண்டும் என நம் முன்னோர்கள் ஆராய்ந்து அறுதியிட்டுள்ளதுமன்றி நோன்பு, பண்டிகை முதலிய காலங்களில் மதத்தின் பெயரால் அவ்வவ்வா காரங்களை அருந்துமாறு கட்டளையுமிட்டுள்ளனர். உடலுக்கு ஏற்ற உணவுகள் உட்கொண்டால் நாம் இது காலை வருந்தும் பிணிகளில் நூற்றுக்கு எண்பதிற்குமேல் இருந்து தப்பலாம். நாம் என்ன ஆகாரம் சாப்பிடுகிறோமோ அவ்வாறு தான் நம் புத்தியும் நடத்தையும் இருக்கும் என்பது சாதாரணமாய் யாவரும் உணர்ந்ததே. முன்னாளில் நம் தாய்மார்க்கு பதார்த்தங்களின் குணகுணங்கள் நன்றாய்த் தெரிந்திருந்தது. சில நூற்றாண்டுகளாகவே நம் நாகரீகம் முறியடிக்கப்பட அதன் பயனாய் பல துறைகளிலும் நாம் நம் முன்னோர்களைக் குறைகூறி வாழ்க்கைக்கு இன்றியமையாத பல நல்ல பழக்க வழக்கங்களை ஆடிக்காற்றில் பறக்க விட்டுவிட்டோம். அதன் பயனே இன்று நாம் அனுபவிப்பது. உடலுக்கு உதவாத ஆகாரங்களை உண்ணவும், ஏற்காத பழக்க வழக்கங்களில் முன்னேறவும் பழகிக்கொண்டுவிட்டோம். நம் நாட்டிற்கு அடுத்துள்ள ஆப்கானிஸ்தானதில் இன்றும் பலமக்கள் 200 ஆண்டுவரை அரோகதிடகாத்திரராய் வாழ்ந்து வருகின்றனர். நம் நாட்டுமக்களின் சாவு வயது 50-ல் இருந்து 30-க்கு வெகு வேகமாய் இறங்கிக்கொண்டு

வருகிறது. இருபது ஆண்டிலேயே நடை பிணமாய் உலவும் வாலிபர்களை காண்கிறோமே தவிர பாலியத்தின் இனிய வதனங்கள் காண்பதற்கு அருமையாகி விட்டன.

4. பண்டைநாளில் மனைவாழ்க்கை என்னும் சகடத்தை இழுத்துச்சென்ற கணவனும் மனைவியும் தங்கள் கடன் உணர்ந்து அவைகளைச் செவ்வனவே ஆற்றிவந்தனர். ஆண்மகன் ஆண்மையுடன் வெளியில் சென்று உழைத்துப் பொருளீட்டியும் பெண்மகள் இல்லிற்கு அரசியாய் பொலிவுடன் விளங்கி அவன் வருவாய்க்குத் தகுந்த செலவிட்டும் நல்வாழ்வு நடத்தி வந்தனர். இல்லக்கிழத்தியர்க்கு குழந்தைகளை வளர்க்கும் முறை பள்ளியில் பயின்ற ஏட்டுச் சுரைக்காயாய் இராமல் நடை முறையில் பயிற்றுவிக்கப்பட்டு இருந்தது. இன்னின்ன சமக்குகள் சேர்த்து இன்னின்ன மருந்துகள் செய்தால் இன்னின்ன நோய்களை எளிதில் குணப்படுத்தலாம் என அறிந்திருந்தனர். நாம் பண்டைச்சிறப்பை மறந்தோம் பண்டை மனை வாழ்க்கை ஒழிந்து வருகிறது. சமையல் செய்யத்தெரியாத வாழ்க்கைத்துணைவியர் பெருகிவருகின்றனர். இந்நாளில் நாம் சாப்பிடும் பொருள்களின் குணகுணங்களை அறிந்து கொண்டாலாவது ஒருவாறு சத்துப்பொருள்களை உண்டு உடலை வலியுடன் வைத்துக் கொள்ளலாம்.

5. மேலைநாடுகளில் சத்துப்பொருள்களைப்பற்றி (Vitamins) ஆராய்ந்துவருகின்றனர். சமீபத்தில் சத்துப் பொருள்களைப்பற்றி ஆராயும் பண்டித சிகாமணிகளின் மகாநாடு ஐரோப்பாவில் கூடி தங்கள் ஆராய்ச்சிகளை ஒப்பிட்டுக் கலந்து ஆலோசித்துள்ளனர். சத்துப்பொருள்களைப்பற்றிப் பல பெரும் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல வெளிவரக்கூடும். ஆராய ஆராய புது மாதிரியான சத்துப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளுக்கு எழுத்தால் பெயரிடப்பட்டுள்ளது. ஆகாரத்தில் சத்துப்பொருள்கள் இல்லாவிட்டாலோ, குறைவுபட்டாலோ, ஆகாரத்திலுள்ள பிற நீர்ச்சத்துகளும், உப்புச்சத்துகளும், கொழுமைச்சத்துகளும் உடலுக்கு வன்மை அளிக்கமாட்டாது. சத்துப்பொருள் இல்லாவிட்டால் பிற சத்துக்கள் வீணைவதுடன் உடலுக்கு தீங்கும் இழைக்கின்றன. ஒருவன் ஆகாரத்தில் சத்துப்பொருள்கள் குறைவடைந்தால் அவன் ஜீவ நாடிகள் இரத்தக்குழாய்கள் ஆயவற்றின் வலிவு நாளுக்குநாள் குறைந்து பலவிதமான நோய்வாய்ப்பட்டுழன்று மரணத்தையும் எதிர் நோக்குகிறான். இரத்தத்தைச் சுத்தி செய்து அதன் அணுக்களைப் பெருக்கி இரத்த ஓட்டத்தை செழுமையாக்கும் இச்சத்துப் பொருள்கள் மானிடர்க்கு இன்றியமையாதவை. இவைகளைப்பற்றி விரிவாய் அறிதல் மிக மிக அவசியமே எனினும் கண்டு சுருக்கமாய் இதைப்பற்றிக் கூறுவாம்.

சமயப் பகுதி.

திருக்குறளும் சமரசமும்.

(உரிமை ஆசிரியருக்கே.)

(243-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

சமரசத்துக்கு அடிப்படை இல்வாழ்க்கையே.

பொது நோக்காளி தன்னைப்போல் பிறரை நோக்குவதற்கும், பிறர் அவன்மேல் நம்பிக்கை கொள்வதற்கும் தூய ஒழுக்கமுடைமை வேண்டற்பாலதென்ற ஆசிரியர் கருத்தைப் பொதுவகையிலுணர்ந் தோமாதலின், மேல் நூலுக்குள் நுழைந்து சிறிது பார்ப்போம். இவ்வன்புநெறி எவ்வாறு தோன்றி வளர்ந்து, முதிர்ந்து அருளாகின்றது. இச்சமரசமாகிய மரத்திற்கு விதை எங்கு விதைக்கப்படுகின்றது? என்ற வினாக்கள் இப்பொழுது எழுவது இயல்பே. இது இல்வாழ்க்கையிலேயே ஆரம்பிக்கின்றது என்று ஆசிரியர் கருதுகின்றார். அன்பு நெறியையும், சமரசப் பான்மையையும் பயிலுவதற்குரிய பெரும் பள்ளி இல்லறமே. மனைவி, மக்கள், நண்பர், ஒக்கல், விருந்தினர் முதலியோரோடு பழகிப் பழகி, அன்பு ஒப்புரவுகளைச்செய்து மனம் பண்பட, நாம் ஒழுக்கம் வாய்க்கப்பெற்று பொது நோக்கைப்பெறுகின்றோம். அது படிப்படியாய் வளர்ந்து சென்று பரவி, முடிவில் சமயத்தையும் எட்டுகிறது. பல சமயத்தினரையும் ஒரே கண்கொண்டு பார்க்கும் நிலை நாடு, மொழி, நிறவேற்றுமைகளைக் கடந்து செல்லும் தன்மையது. காலத்தையும் அது கடக்கும். அப்பரும் மடிச்சார்ந்தாராகிய அடியார்கள் அனைவருக்கும் வணக்கம் கூறிய ஆளுடைய நம்பியும், இக்காலம் வரையிலும், இன்னும் வருங்காலம் முழுவதிலும் சிறந்த சமரச ஞானச்செல்வர் என்று போற்றப்படக்கூடிய வள்ளுவனும் இம் முதிர்ந்த நிலையில் நிற்பவரன்றோ? இங்கு விதைக்கப்படும் சமரச வித்து முறைப்படி விதைக்கப்படுமாயின், முளைத்து, மரமாகிக், காய்த்துப்பழுத்து பயனைத்தர அதை உண்டு ஒவ்வொரு

வரும் இன்புறலாம். இவ்வாறே ஒவ்வொரு குடியினரும் தங்கள் குடிவாழ்க்கையைச் சிறப்புற நடத்தினால் அச்சமுதாயத்தின் பெருமையை எடுத்துக்கூறவும் இயலுமோ?

இல்வாழ்க்கை தொடங்குவதே நாம் வியக்கத்தக்கதாயிருக்கின்றது. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைப்படியே திருவள்ளுவர் இல்வாழ்வைக் கூறத்தொடங்குகின்றார். இது நம் முன்னோரின் பரந்த பொது நோக்கத்தைப் புலப்படுத்தாநிற்கும். வாழ்க்கைத் துணைவராகிய இல்லான் இல்லாள் என்ற முறையில் இருந்து இல்வாழ்க்கை நடத்த ஆரம்பிப்பதற்கு முன்பு அவர்கள் என்ன நிலையிலிருந்தனர்? வாழ்க்கைத் துணையாய் ஒருவருக்கொருவர் அமைய நேர்ந்த விதம் என்ன? முற்காலத் தமிழ் மக்களின் மண முறையை ஆராய்ந்தால் இது புலப்படும். தொல்காப்பியத்திலும், இறையனார் களவியலிலும் அவற்றைப் பின்பற்றிய பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் நாம் காணக்கூடிய மணமுறையையே திருவள்ளுவரும் கூறுகின்றார். இங்கு தான் சமரசம் ஆரம்பமாகிறது. பிணி மூப்புக்களின்றி ஒரு தன்மையராய் உருவும், திருவும் குலமும் குணமும், பருவமும், அன்பும், கல்வியும் ஒத்தவராய தலைமகனும், தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றி ஊழ்வினைப்பயத்தால் தாமே எதிர்ப்பட்டுக் காதலித்துக் கலக்கும் முறையைத் திருவள்ளுவர் கூறுவர். பிறகு பலரும் அறியத்தலைவன் தலைவியை வரைந்துகொண்டு இல்லறம் நடாத்தி அன்பு நெறியைப் பரவச் செய்வான்.

இல்வாழ்கை சமரசத்தில் ஆரம்பிப்பது.

> "யாயும் யாயும் யாராகியரோ
> எந்தையும் நுந்தையு மெம்முறைக் கேளிர்
> யானு நீயு மெவ் வழியறிதுஞ்
> செம்புலப் பெயனீர்போல
> அன்புடை நெஞ்சந்தாங்கலந்தனவே"

என்னும் குறுந்தொகையடிகளினால் அன்புள்ளங்களினாலேயே முதன் முதற் காதலர் கலந்தனரென்றும், அவர்களுக்குள் அதற்கு முன் உறவின் முறையிருந்ததில்லை யென்றும் அறிகின்றோம்.

"வானபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
மானவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டு தந்த
விளவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே"

எனத்தெய்வத்தையல்லாது நயமேவனென்று தலைவியின் நலத்தை யும் பாராட்டுந்தலைவன் கூற்றையும் நோக்குக. அன்பில்லாவிடத்தில் மணமில்லையாதலின் மணமக்கள் அக்காலத்தே ஒருவரை யொருவர் பலவிடங்களில் கண்டு அன்புகொண்டு களவொழுக்கத்தில் நின்று ஒழுகுவர். பிறகே பலருமறியக் கற்புமணம் நிகழும். கற்பெனப் படுவது களவின் வழித்தேதயாகும். களவின்றிக்கற்பு அமைவ தில்லை. மணமக்களின் மனமொத்தமே மணம் என்பது அக்காலத்து நன்கறியப்பட்டது. கல்வியிற் பெரிய கம்பரும் இக்கருத்துப் பற்றியே,

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர் தம்முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரு மாறிப்புக் கிதயமெய்தினர்"

என்று இராமனும் சீதையும் திருமணத்துக்கு முன்பேயே காத லுள்ளங்களாற் கலந்தனர் என்று கூறுவாராயினர்.

திருக்குறள் மூலமாக நாமறியும் இல்வாழ்க்கை முறையும் இவ்வாறே அமைந்திருக்கின்றது. திரு வள்ளுவர் வகுக்கும் முறை மிகவும் உன்னதமான அன்பு முறையாம். உரு, திரு, குலம், குணம், கல்வி முதலியவற்றால் ஒத்து, மனமும் ஒத்துக் கலந்த காதலரே இவ்வாழ்க்கைக்கும், மன ஒற்றுமையோடு இருவரும் கூடிச்செய்ய வேண்டிய அன்புச்செயல்களுக்கும் ஒப்புரவு ஈகைகளுக்கும் ஏற்றவர் என்று ஆசிரியர் கருதுவர். திருவள்ளுவர் கூறும் களவு கற்பு முறைகளின் விரிவை யாம் எழுதிய "திருவள்ளுவர் வகுத்த ஒழுக்கமுறை" யிற் காமத்துப்பாலின் சுருக்கத்திற் கண்டுகொள்க.

இல்லறமாகிய பெரும் பள்ளியில் அன்பைப் பயின்று, பிறகு அதனை எவ்வாறு பிறருக்குஞ் செலவிட்டு, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராவது என்று தேர்ந்த பிறகே 'சமரச நோக்காளி' என்ற பட்டம் கிடைக்கும். இல்வாழ்க்கைக் குறிய வாழ்க்கைத் துணையின் நலத்தை விதந்தோதிய ஆசிரியர் மனையின் நன்கல மென்று கருதப்படுகின்ற மக்கட்பேற்றின் சிறப்பைக்கூறிமேல் அன்புடமை விருந்தோம்பல் முதலிய துறைகளை முறைப்படி யமைத்துள்ளார். இவ்வதிகாரங்கள் ஏன் இம்முறையில் வைக்கப் பட்டுள்ளன என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. சிறிது கூர்ந்து நோக்குவோர், இவ்வாழ்க்கைக்கு அடிப்படையாக வேண்டப் படுவது அன்புடைமையென்றும், அதுவே சமரச நோக்குக்கு ஆரம்பமென்றும், அவ்வன்பே பிறகு அருளாகமாறி மேல் நிலைக்கு ஒருவரைக் கொண்டுபோகுமென்றும் அறிவர். மணவாழ்வின் முன் மணமக்கள் தம் நலத்திலேயே கருத்துடையராய்க், காளைப் பருவத்தில் தம் உடல் நலத்திலும், தம்மை ஒப்பனை செய்து கொள்ளுவதிலும், பொதுவாகக் காலத்தைக் கழிக்கின்றனர். தம் கட்டழகைப் பிறர் கண்டுகளிக்க வேண்டுமென்ற எண்ணம் பல இளைஞர் மனதில் நின்று நிலவி அவர்கள் நடையுடை பாவனை சீர் திருத்துவதை நாம் கண் முன் காண்கின்றோம். பிறர் நலம் பாராட்டுதற்கண் வேண்டப்படும். அன்பாகிய ஊற்று இன்னும் ஊற ஆரம்பிக்கவில்லை. அதை அழுக்காறு அவா முதலிய மாசுகள் தூர்த்து மூடிக்கொண்டிருக்கின்றன. இல்வாழ்கையில் புக்க பின்னரே இவ்வூற்று சீர்திருத்தப்படுகிறது. அழுக்காறு, அவாவாகிய மாசுகளும் சிறிது சிறிதாக நீங்குகின்றன. தத்தம்மையே நேசித்து வந்த மணமக்கள் இப்பொழுது ஒருவரையொருவர் அன்பு செய்து காதலிக்க ஆரம்பிக்கின்றனர். இப்போது ஒரு பெரும் மாறுதல் ஏற்படுகின்றது. ஒருவரிடத்தில் கட்டுப்பட்டுக் கிடந்த அன்பு மடைதிறந்த வெள்ளம்போல் இருவர்பாலும் பாய ஆரம்பிக்கின்றது தன்னலமே பாராட்டலும், அழுக்காறு முதலியனவும் அன்பினால் அழிக்கப்பட்டு ஒழிகின்றன. அன்பூற்றும் மாசு நீங்கி அன்பாகிய தூய நீரை அளிக்கின்றது.

போது நோக்கம்

இல்வாழ்க்கையில்

வளரும் முறை

இருவரும் கூடி வாழும்போது இவர்கள் அன்பின் பயனுகப் பிறப்பன பிள்ளைகள். தாயும் தந்தையும் பிள்ளைகள் மாட்டுச் செலுத்தும் அன்பைக்கூறவும் வேண்டுமோ? காதலர் இருவர் பாலும் இருந்த அன்பு இப்பொழுது இன்னும் விரிந்து பிள்ளைகளிடத்தில் செல்கின்றது. படிப்படியாக தன்னலம் குறைந்துவருவதையும் பிறர் நலத்தின் பால் நாட்டஞ் செல்லுதலையும் கவனித்தல்வேண்டும். இதனுன்றே அருளறம் வீட்டில் பிறக்கின்றது என்ற பொருள்கொண்ட ஆங்கில முதுமொழி யெழுந்தது. பெற்றோர் தம் நலம் மறந்து பிள்ளைகள் நலத்துக்கென வாழ்பவராகின்றனர். பிள்ளைகள் நோய் வாய்ப்பட்டு வருந்தாது அரும்பாடுபட்டு வளர்த்து, அவர்கட்காகத்தான் உணவின்றிக்கிடந்தும், மருந்துகளருந்தியும், அவர்களை ஒப்பனை செய்து கண்டு மகிழ்ந்து சீராட்டியும் பலவிதங்களிலும் பேணுகின்ற அன்னையின் அருளையும், பிள்ளைகளுக்குவேண்டிய பிறநலங்களைக்செய்து, கல்வி புகட்டி அவையத்து முந்தியிருக்கச் செய்யும் தந்தையின் கருணையையும் அறியாதார் யார்? மனை வாழ்க்கையின் நன்கலம் எனப்படும் பிள்ளைகள் குடி வாழ்க்கையில், அன்பு நிலவளர்வதற்குரிய நெறியில் முதற்படியாக அமைந்திருக்கின்றனர்.

பிள்ளைப்பேறும், அன்புடைமை விருந்தோம் பல் முதலியனவும் சமரச நோக்கை வளர்த்தல்.

(தொடரும்)

S. ஆறுமுக முதலியார், B. A., L. T., C. O. L.,

ஆராய்ச்சிப் பகுதி.

ஸ்ரீசுப்பிரமணிய க்ஷேத்திரம்.

ஸ்ரீ சுப்பிரமணிய க்ஷேத்திரம் தென்கன்னடம் ஜில்லாவில் அதன் தலைநகராகிய மங்களூருக்கு தென் கிழக்கில் உள்ள ஒரு திவ்விய க்ஷேத்திரம். அதனைப்பற்றி நம் நாட்டார் கூறும்போது உடுப்பியோடு சேர்த்து உடுப்பி சுப்பிரமணியம் என்று கூறுவார்கள். உடுப்பி என்னும் கிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரம் மங்களூருக்கு வடக்கே 30 மைலிலும், சுப்பிரமணியம் என்னும் முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரம் மங்களூருக்கு தென் கிழக்கில் 60 மைலிலும் இருக்க இவ்விரண்டையும் இணைத்து உடுப்பி சுப்பிரமணியம் என்று கூறுதலானது காசி இராமேசுவரம் என்ற ஸ்தலச் சேர்க்கைப்போல் உள்ளது. சென்ற கந்தர் சஷ்டியன்று ஸ்ரீ சுப்பிரமணியம் சென்று முருகக்கடவுளைத் தொழும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்பாக்கியம் இது வரையில் பெறுத எனது நண்பர்கள் எளிதில் அதன்வழி தெரிந்து கொள்ளும் வண்ணம் இதனை எழுதலானேன்.

மங்களூரிலிருந்து சுப்பிரமணியம் போக இரண்டு வழிகள் உண்டு. ஒன்று உப்பினங்காடி மார்க்கம். மற்றொன்று புத்தூர் மார்க்கம். புத்தூருக்குக் காசரகோடு ஸ்டேஷனிலிருந்தும் செல்லலாம். உப்பினங்காடி வழியாகப்போவது சுலபம். வண்டிகள் எளிதில் கிடைக்கின்றன. மோடார்கள் ஓடுகின்றன. உப்பினங் காடியில் குமாரதாரை, நேத்திராவதி என்ற இரண்டு நதிகள் சேருகின்றன. அந்தக்கூடுதுறையில் ஆற்றின் மத்தியில் சகஸ்ரலிங்க தேவஸ்தானம் ஒன்று இருக்கின்றது. அப்புனித க்ஷேத்திரத்தைத் தரிசித்துச் செல்லலாம். மழைக் காலத்தில் வெள்ளத்துக்குள் அவ்வாலயம் மறைந்து விடுகின்றது. வெள்ளம் இல்லாத காலத்தில்

மோடார் வண்டி சுப்பிரமணியம் வரைக்கும் நேராகப் போகிறது. புத்தூர் வழியாகச் சென்றால் யானைகல் என்ற இடம் வரைதான் செல்லலாம். பிறகு 10 மைல் வண்டி கிடைப்பது அரிது. அவ் வழியில் தர்மஸ்தலம் என்ற ஒரு சிவாலயம் உண்டு. அங்கே வாராக்கடன்களைப் பெறுவதற்கு ஈசனிடம் முறையிடுதல் உண்டாம்.

உப்பினங்காடி மங்களூருக்கும் சுப்பிரமணியத்திற்கும் மத்தியில் இருக்கிறது. அங்கிருக்கும் நேத்திராவதிக்குப் பாலம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இப்போது தோணியால் கடக்கவேண்டும். அந்நதியைக் கடந்து சென்றால் ஹொசே மடம் (புதுமடம்) என்ற ஊருக்குச் செல்லலாம். அங்கேயும் நதியைத்தாண்ட வேண்டும். மழைக்காலங்களில் அவ்வூரிலிருந்து சுப்பிரமணியம் செல்லுவதற்கு மாட்டு வண்டிதான் கிடைக்கும். போகும் வழியில் ஒரு ஜெயின சினகரம் இருக்கிறது. சுப்பிரமணியத்தில் தங்குவதற்கு நல்ல சத்திரங்கள் இருக்கின்றன. அங்கே இரண்டு தீர்த்தங்கள் உண்டு. ஒன்று குமாரதாரை, இது குமார பருவதத்திலிருந்து வருகின்றது. ஊருக்கு ஒரு மைல் தூரத்தில் போகிறது. முருகக்கடவுளுக்கு சேனபதியாக அபிஷேகம் செய்தபொழுது அவரது பாதத்திலிருந்து ஒழுகிவந்ததாம். அம்மலைச் சிகரத்தில் இரண்டு அடிச்சுவடுகள் இருக்கின்றன. மற்றொரு தீர்த்தம் தர்ப்பண தீர்த்தம் என்பது. இது கோயிலின் சன்னதியின் முன்னால் ஓடுகின்றது. தண்ணீர் மிகக்குளிர்ச்சி யாத்திரிகள் வெந்நீரில் குளித்துவிட்டுப் பிறகு இந்நதியில் குளிப்பது உண்டு.

ஆலயத்தில் யாத்திரிகள் சேவை நடத்த 4000 ரூபாய் முதல் 4 அணை வரை விதிதங்கள் ஏற்படுத்தி இருக்கின்றார்கள். தினந்தோறும் 10 மணிக்கு மகாபூசை நடக்கிறது. அதற்கு நைவேத்தியங்கள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு வந்திருக்கும் யாத்திரிகள் எல்லாருக்கும் இலை போட்டு பரிமாறுகிறார்கள். இங்கே அக்ஷய பாத்திரம் ஒன்று உண்டு. அதில் சாதம் நிரம்பியிருக்கும். அர்ச்சகர் அதைச் சுற்றிவந்து துளசியால் அர்ச்சிக்கிறார். அதன் பிறகு எவரும் சமைக்கக்கூடாது. எத்தனைபேர் வந்தாலும் சாதம் போதுமாம். இதுவரையில் குறைவு ஏற்பட்டதில்லையாம்.

ஆலயம் மிகப்பெரிதல்ல. கர்ப்பக்கிரகம் திறப்பதேயில்லை. அதை மார்கழி பகுள ஏகாதசி யன்றுதான் திறக்கிறார்கள். அப் பொழுதும் ஒரு வரும் பார்க்கக்கூடாது. பூசை செய்பவர் மட்டும் அநேக சத்தியங்கள் செய்துவிட்டு உள்ளேசென்று கையைத் துணி யால் மூடிக்கொண்டு மூன்று பிடிமண் எடுத்துவருவார். அதுதான் மூலப் பிரசாதம். சிறு பொட்டலமொன்று 4 அணா வீதம் கொடுப் பார்கள். பலவித விஷக்கடிகளுக்கும் அது மருந்தாம். உள்ளே என்ன இருக்கிறதென்பது ஒருவருக்கும் தெரியாது. வலம் வரும் போது 6 அடி சதுரமான ஒரு அறை தெரிகிறது. அதன் மேல் கலசம் ஒன்று இருக்கிறது. அதுதான் கர்ப்பக்கிரகம் என்று ஊகிக்கவேண்டும். கர்ப்பக்கிரகத்துக்கு முன்னால் மூன்று விக்கிர கங்கள் இருக்கின்றன. கீழேஇருப்பது ஏழுதலைஆதிசேஷன். அதன் மேல் இருப்பது ஏழுதலைவாசுகி. அதன்மேல் ஒரு பாம்புப்படத்தின் கீழ் மயில்வாகனத்தில் முருகக்கடவுள் தோன்றுகிறார். இவையனைத் தும் பொன்னால் செய்யப்பட்டவை. உற்சவரும் பொன்னால் ஆகிய சிறிய உருவத்தோடு இரத்தினபரணங்களுடன் இருக்கின்றார். உற் சவர் சஷ்டிதோறும் வெளிவருவதுண்டு. அப்போது பொரி, அவல், சர்க்கரை, தேங்காய் வழங்கப்படும்.

கோயிலுக்கு அருகில் கோயிலுக்குள்ளேயே ஒரு மாத்வ மடம் இருக்கிறது. இம் மடத்திற்கு ஆதி புருஷர் மத்வாச்சாரிய ரின் தம்பியான விஷ்ணுதீர்த்தர் என்பவர். மடத்திலும் பூசைநடக் கிறது.

சுப்பிரமணியத்தில் இரதோற்சவம் மார்கழி சுத்த சஷ்டியில் நடக்கிறது. அப்போது 25,000 பேர்வரை கூடுவார்கள். அதிகாரிக ளால் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பகவான் இரத த்தில் வரும்பொழுது கருடன் உச்சியில் பிரதக்ஷணம் செய்யுமாம். மற்றக் காலங்களில் இந்த க்ஷேத்திரத்தில் கருடனைக் காணமுடியா தாம்.

நாள்தோறும் பிராமண சந்தர்ப்பனை ஆனவுடன் எரியப்பட்ட எச்சிலில் தீராதநோயாளிகள் புரளுவதைக் காணலாம். அவ்விதம் புரண்டால் நோய் போய்விடுகிறதாம்.

ஆலயத்திற்கு வடகிழக்கில் தர்ப்பண தீர்த்தத்திற்கு அக்கரையில் ஆதி சுப்பிரமணியம் என்ற ஒரு சிறு கோயில் இருக்கின்றது. கர்ப்பக் கிரகத்தில் பாம்புப்புற்றுதான் இருக்கின்றது அதற்கு முன்னல் உலோகத்தால் செய்த நாகர் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. தீபாராதனம் ஆனவுடன் புற்றுமண்தான் பிரசாதம். முன் காலத்தில் இக்கோயில்தான் மூலஸ்தானமாம். இங்கிருந்து முக்கால் மைல் தூரத்தில் கணேச ஆஞ்சனேய ஆலயங்கள் காண்டின தும் பிலத்துவாரம் என்ற ஒரு குகை இருக்கிறது. இக்குகையில் வாசுகி ஒளித்துக்கொண்டானும். இதில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று 1/4 மைல்; மற்றொன்று அளவுதெரியாது. தற்போது ஒளவால் கள்குடிகொண்டிருக்கின்றன.

கா. சு.

குறிப்பு.

சுப்பிரமணிய க்ஷேத்திரத்தைப் பற்றி ஒரு மகாத்மியம் உண்டு. அதனை வடமொழி சுலோகத்திலும் கன்னட உரையிலும் பதிப்பித்திருக்கிறார்கள். அது ஸ்காந்த மகாபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையில் சஹ்ய காத்திரி கண்டத்தில் கூறப்பட்டுள்ளதாம். அம்மகாத்மியம் 5 அத்தியாயங்களில் முடிவுபெறுகிறது.

சுப்பிரமணிய மடத்து ஆதி புருஷரான விஷ்ணு தீர்த்தர் குமார பர்வதச் சிகரத்தின் மீது இன்னும் இருக்கின்றாராம். அந்நிருத்த தீர்த்தருக்கு ஒரு சம்புடம், தர்ப்பணம் (கண்ணாடி) அக்ஷய பாத்திரம் இவைகள்கிடைத்தன. தர்ப்பணத்திலல் தர்ப்பணநதியும்சம்புடத்திலல் சம்புடதீர்த்தமும் பெயர் பெற்றன. வள்ளாள ராஜன் சம்புடத்தை யானையின் காலிலல் தள்ளச்செய்ய அந்த யானை நதியில் விழுந்து இறந்தது. அதனல் அதற்கு யானை குண்டி என்ற பெயர் ஏற்பட்டது. வள்ளாள ராஜன் பிரதிமை அங்கே காணலாம்.

இந்த சுப்பிரமணிய க்ஷேத்திரம் தான் திருமேவரகம் என்ற படைவீடு என்பதை கார்மண்டல சதகம்

பிறைமுடிக் கண்ணிப் பெருமாட்டி தோன்றல் பிடிதழுவக்
கறையில் புளிஞர் குலக்கொடி தாவக் கவினியது
குறைவருஞ் சந்தகில் தாங்கிக் குலாஞ்சிகி கூய்வளஞ்சால்
மறைவரு மோகக் கோத்திரங் காராளர் மண்டலமே

என்ற செய்யுளால் அறியலாம். நச்சினர்க்கினியரும் "ஏரகம் மலை நாட்டகத்தொரு திருப்பதி" என்று கூறுகின்றார். கும்பகோணத்துக்கடுத்த சுவாமி மலையை ஏரகம் என்று சொல்லுவது பிற்காலத்து வழக்கு போலும். படை வீடுகளுள் ஒன்றான சுப்பிரமணியத்தை அடியார்கள் தரிசிக்க வேண்டியது அவசியமல்லவா?

—பத்திராசிரியர்.

ஒழிபு.

இருவேறு இயல்பு.

ஒரு சிறு கதை.

பகலவன் மேற்கடல் அடைந்து இரண்டு நாழிகை இருக்கும். பூர்ண சந்திரன் முழுக்களைகளோடு பிரகாசித்துக் கொண்டிருந்தான. அவனுடைய குளிர்ந்த கிரணங்கள் ஆற்றில் படர்ந்த சிறு அலைகளின்மீது பட்டு வெண் சரிகை துகில்களை அசைவதுபோல் மிளிர்ந்து ஆடின. ஆடிப் பருவ மழையினால் இருபுறமும் விரிந்து பரவிய வெள்ளம் பவானியாற்றில் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. வெண்ணிலா அந்நீர்ப்பரப்பின் மீது விழ அந்நேரத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே சோபையாகவும் ஆனந்தமயமாகவும் இருந்தது. அவ்வியற்கை இன்பத்தை அனுபவிக்க எவர்தான் விரும்பார்கள். ஒரு அழகிய சிறு பரசலில் ஆறுபேர்கள் ஏறிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். இயற்கை அழகைப் பருகிக்கொண்டு மிக மகிழ்ச்சியுடன் இனிய கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அக்கீதத்தை அலைகள் பிரதிபிம்பித்துக் கரையோரமாக இனிய மழலைகளாக பொழிந்தன.

அந்நேரத்தில் ஒரு பெண் மூக்காடிட்டுக்கொண்டு ஒரு சால்வையால் தன்னைப்போர்த்துக் கொண்டும் கையில் எதையோ வைத்து மூடிக்கொண்டும் மெதுவாக தடியை ஊன்றிக்கொண்டு பவானிக்கரையோரமாக வந்தாள். வயது நடுத்தரமாக இருந்த போதிலும் வியாதிபினால் உடல் மெலிந்து கண்கள் ஆழ்ந்து எலும்புகள் தோன்ற கிழவி போலத் தோன்றினாள். பரசலில் நிலா வெளிச்சத்தில் யவ்வன வயதுள்ளவர்கள் அழகிய கீதத்துடன் பாடிக் கொண்டு உலாவி வருவதைக் கண்ட இவளுக்கு மனம் பொறுக்க வில்லை. அவ்வின்பத்தில் ஆயிரத்தில் ஒரு பங்காவது தான் அனு

பலிக்கவில்லையே என்று மனம் நொந்தாள், பொருமைப்பட்டாள், துக்கித்தாள். ஆனல் அடுத்த வினுடியில் நானும் இவர்களைப்போல் மகிழ்வேன் என்று பல்லைக்கடித்துச் சொல்லி ஒருதரம் கெட்ட சிரிப்பு ஒன்று சிரித்தாள். பரசல் அருகில் வருவதையே உற்றுப் பார்த்துக்கொண்டு பதுங்கிக்கொண்டு நின்ருள்.

சில ஆண்டுகளாகவே அப்பெண் ஒரு பொல்லாத வியாதியால் வருந்திக்கொண்டிருந்தாள். அவ்வியாதியைப் போக்கடிக்கப் பல பண்டிதர்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் காட்டியிருக்கிருள். அளவற்ற பணத்தைச் செலவழித்திருக்கிருள். சாப்பிடாத மருந்தில்லை. உட்கொள்ளாத மூலிகை இல்லை. கோயில், குளங்கள் எல்லாம் சென்ருள். நோற்காத நோன்பும் வேண்டாத வேண்டுதலையும் பிரார்த்திக்காத பிரார்த்தனை எல்லாம் அனுசரித்தும் வியாதி விட்டபாடில்லை. இறுதியில் பவானிக்கரையில் வந்து சேர்ந்தாள். சத்தியமங்கலத்துக்கு 12 கல்லில் போனை பன்னரி மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்ருள். ஆடு பலி கொடுத்து கைநிறையக் காணிக்கை வைத்துப் பூஜாரியை பலன் கேட்டாள். பூஜாரிக்கு ஆவேசம் வந்து சாமிசொன்னன். 'அடுத்த முழுமதியில் 12 ஆடு, 24 கோழி, 48 தேங்காய், 96 பழம், 192 வெற்றிலை, 384 பாக்கு, 768 தட்டு வைக்கவேண்டும். உடனே அம்மனுக்கு அருள் வரும். ஒரு மந்திரமுடிச்சு அருளுவாள். அதனை ஒரு செளக்கியமான அழகிய பெண்மீது எறிந்தால் அவ்வியாதி அவளிடம் சென்றுவிடும்' என்ற உத்திரவு பிறந்தது. அம்மாளும் அவ்வாக்கை மிகுந்த ஆவலுடன் ஏற்றுக்கொண்டாள். அடுத்தபௌர்ணமி வந்தது. ஆணையிட்ட பொருள் முழுதும் சேகரித்தாள். கோயிலுக்கு அன்று விடியற்காலம் சென்று பூஜாரியிடம் சமர்ப்பித்தாள். பூஜாரியும் அம்மனுக்குச் செய்யவேண்டிய சடங்கு முழுதும் செய்தான். பலிகள் இடப்பட்டன. ஆவேசம்வந்தது வாக்குபிறந்தது. அம்மன் கையில் ஒரு முடிச்சு விழுந்தது. அதனைப் பொன்னே போலப் போற்றிப் பேர்வைக்குள் மூடிக்கொண்டாள். யவ்வனப் பெண்ணின் மீதல்லவோ எறியவேண்டும். அவ்வாரணியத்தில்

ஏகாந்தமான காரடவியில் அழகிய பெண்கள் எங்கே கிடைப்பார்கள். உடனே வண்டி கட்டிக்கொண்டு சத்தியமங்கலத்திற்குப் புறப்பட்டாள்.

சத்தியமங்கலம் வந்து சேர இரவு ஒரு நாழிகையாயிற்று. நெடுவழி வந்ததினால் அலைச்சல் அதிகம். வியாதியின் கொடுமை சகிக்கக்கூடவில்லை. ஆனால் சாமி சொன்ன வாக்கில் நம்பிக்கை இருந்தது. அது அவளுக்கு ஒரு தைரியத்தைத்தந்தது. அவள் தங்கியிருந்த வீட்டை விட்டுத்தனியே அம்முடிச்சை எடுத்துக் கொண்டு ஒரு பெண்மணியைத் தேடிச்சென்றாள். அவ்விரவில் எந்த பெண் வெளியேவருவாள் தன் காரியம் வியர்த்தமாய்ப்போய் விடுமோ என்று பயந்தாள். நிலா பிரகாசிக்கிறது. ஆற்றோரம் செல்லலாம் என்று எண்ணி மெள்ள மெள்ள தடி ஊன்றிக்கொண்டு சென்றாள். தெய்வமே அவளுக்குத்துணை காட்டினாற்போல முன் சொன்ன பரசல் வந்தது. அழகிய கீதம் கேட்டது. அவர்கள் அனுபவிக்கும் இன்பத்தைக்கண்டு பொறுமைப்பட்டாள்.

பரசல் சிறிது சிறிதாகக் கரையோரமாய் வந்தது. அதில் மூன்று யவ்வன புருஷர்களும் மூன்று யுவதிகளும் இருந்தனர். பரசலோட்டி மெதுவாகத் துடுப்பு வீசிக்கொண்டிருந்தான். நிலா வெளிச்சத்தில் ஒரு யுவதியின் உருவம் தெரிந்தது. அழகிய முகம், குளிர்ந்த பார்வை, ஆரோக்கிய சுபாவம், திடசரீரம். அவ்வித உருவத்தில் சுகம் என்பது தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. "இவள் தான் நம் எண்ணத்திற்குச்சரி. பன்னியம்மனே அவளை நம்மிடம் அனுப்பியிருக்கிறாள். எல்லாம் உனது செயல்" என்று எண்ணிக்கொண்டு தான் தெரியாதபடி ஒரு மரத்தடியில் ஒளிந்து கொண்டாள். படகு கரைக்கருகு வந்தது. உடனே தன் கையிலிருந்த முடிச்சை எடுத்து ஓங்கி அந்த அழகிய யுவதிமீது வீசினாள். அவள்மீதுபட்டது. அடியினால் அலறி பரசலில் வீழ்ந்தாள். எனையோர் துடுக்கிட்டு அவளைத்தாங்கி எடுத்தார்கள். மூர்ச்சை தவறியிருந்தாள். பரிதாபம்! கிழவியோ அவ்வினாடியே அங்கிருந்து பயந்து மெள்ள மெள்ளத் தடியூன்றிக்கொண்டு தன்னிருப்பிடம் சேர்ந்தாள்.

நோயாளிக் கிழவிக்கோ அம்மன் வாக்குப்பலிக்க ஆரம்பித்தது. வியாதி கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பித்தது. ஆவ் வூருக்கு ஒரு வைத்திய நிபுணன் புதிதாகவந்தான். அவன் அடுத்த ஆசனூர் நிம்பம், தலைமலை, தளவாடி மலைகளிலிருந்து பலவித மூலி கைகளைக் கொண்டுவந்து குளிகைகளும் தைலங்களும் செய்து கொடுத்தான். ஆறு மாதத்தில் நோய் முழுதும் போய் பூர்ண சௌக்கியம் ஏற்பட்டது. கிழவிபோன்ற தேகம் தசையூறி யூறிப் பொன்போல் ஆகிவிட்டது. வேறு உருவமே வந்துவிட்டது. ஒரு யுவதிபோலவே தோன்றினாள்.

ஆனால் மனம் மாத்திரம் நிம்மதியடையவில்லை. அடிக்கடி சந் தோஷமாகப் பொழுதுகழிக்கும் நேரங்களில் எல்லாம் தான் அடித்த யுவதியின் முகம் எதிரே தோன்றும். உடனே வெருண்டு போவாள். ஒவ்வொரு தடவை இரவில் அவளுடைய கனவே அவள் காண்பாள். நனவிலும் அவளுடைய உருவமே அடிக்கடி கண் எதிரே பிம்பிக்கும். அழகிய முகம் தோன்றும். அடிபட்டு மூர்ச்சை ஆவாள். அவளை வீட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். வியாதி அதிகரிக்கும். தன்னைப்போலவே அவளும் மெலிவடை வாள். நோபால் வருந்துவாள். மரணத்தருவாயிலிருப்பாள். இக் காட்சிகளே இருக்க இருக்க இரவிலும் பகலிலும் காண ஆரம்பித் தாள். மனம் நொந்துப் பரிதவிப்பாள். "நாம் சுகமடைந்தோம் நம்மாலே யாதுமறியாத இந்த அப்பாவிப்பெண் இவ்வாறு வருத்தம் அடைந்தாளே. ஒரு பாவமும் அறியாதவளை இத்துயரத்தில் சேர்த்து விட்டேனே" என்று நொந்து கொள்வாள். நாள் செல் லச் செல்ல மனம் நிம்மதியில்லை. வியாதி மறுபடியும் வந்துவிடும் போல் இருந்தது.

ஆடி மாதம் கழிந்தது. ஆற்றில் இருகரையும் புரள வெள்ளம் வந்தது. பௌர்ணமியும் வந்தது. ஒரு ஆண்டு ஆயிற்று. நிலா மிகவும் சிறந்து பாய்ந்தது. வெள்ளிக் கிரணங்கள் அலைகளின்மேல் பட்டு ஆனந்தம் விளைவித்தன. நமது கதா நாயகி அவ்வியற்கை அழகை அனுபவிக்க ஆற்றங்கரை சென்றாள். சந்திரனுடைய

வெண் கரங்கள் ஆற்றின் கருதிவலைகளைத் தழுவி அணைந்து முத்தமிடும் தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தாள். சிறிது நேரத்தில் மெள்ள மெள்ள ஒரு பரசல் வர ஆரம்பித்தது. அதிலிருந்து இனியபேச்சு வர ஆரம்பித்தது. மேலும் அழகிய கானமும் எழும்பியது. என்ன மனோகரம். இவை எல்லாம் நம் நாயகிக்கு மனோ பாவசம் தந்தனவா?

பரசலைக் கண்டாள், கானம் கேட்டாள். ஒரு ஆண்டுக்கு முன் நடந்த காட்சி எதிர் தோன்றியது. 'அழகிய வசீகரமும் திடசுகமும் முகத்தில் தாண்டவம் ஆடினது. மாந்திரீக முடிச்சு எரியப்பட்டது. பரசலில் வீழ்ந்தாள் யாதொரு பாவமும் அறியாத அப்பெண். எடுத்துச் சென்றூர்கள் உறவினர். நோய் அதிகரித்தது. உடல் மெலிந்தது. எலும்பும் தோலும் ஆனாள். வியாதி சகிக்க முடியவில்லை. மரணத் தருவாயில் இருக்கிறாள்.' இத்தோற்றங்கள் எல்லாம் ஒவ்வொன்றாய் தன் கண் முன் தோன்றின. அடக்க முடியாத துக்கம் வந்தது. தான் எங்கு இருக்கிறாள், என்ன செய்கிறாள் என்பதை அறியாள். உன்மத்தம்போல் எழுந்தாள், அழுதாள், சிரித்தாள். ஆற்றோரம் சென்றாள். ஆற்றில் இரங்கினாள். நீராள் மறைந்தாள். அதை எவரும் காணார்.

சிறிது நேரத்தில் பரசல் வந்தது. முன் சென்ற அறுவரே தோன்றினர். பரசலோட்டி மெதுவாக தடுப்பைச் செலுத்தினான். அதே யுவதியும் மற்றோரும் பாடிக்கொண்டு இயற்கை யழகை இன்புற்றுப் பருகி வருகிறார்கள்.

—கோவைக் கிழார்.

திங்கட் செய்திகள்.

6—5—35ல் மன்னர் பிரான் வெள்ளிவிழா வெகு மேன்மை யாகக் கோவை நகரில் நடைபெற்றது. பல பாடசாலைச்சிறுமிகள் வெள்ளிவிழாவைப் பற்றிய நூதனப்பாடல்களை இனிமையாகப் பாடினார்கள்.

* * *

12—5—35ல் ஸ்ரீ ஆச்சாரியார் கம்ப நாட்டாழ்வார் கவி தையில் சுவை படத்தக்க சிலபாகங்களை எடுத்து பாராட்டி ஒரு இனிமையான சொற் பொழிவைத்தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்தி னார்கள்.

* * *

18—5—35ல் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. வள்ளுவர் சன்மார்க்கச் சங்கத் தார் கோவைத் தெருக்கள் வழியாக நல்லிசைகளுடன் பஜனை செய்து கொண்டு தமிழ்ச்சங்கத்துக்கு வந்தார்கள். சங்கத்தில் பல புலவர்கள் உள்பட கூட்டம் ஏராளமாய் இருந்தது. நமது ஆசிரி யர் தலைமை வகித்தார். பன்னிரண்டு புலவர்கள் சொற் பொழிவு ஆற்றினார்கள். பல வகுப்பார்களும் பல சமயத்தார்களும் இத்திரு விழாவில் கலந்து கொண்டு தங்கள் தங்கள் எண்ணங்களையும் வெளி யிட்டார்கள் கோவையில் நடந்ததைப்போலவே நமது தமிழ் நாட் டில் பல இடங்களிலும் இத்திருநாள் கொண்டாடப்பட்டது.

* * *

31—5—35ல் கோவை Y. M. C. A. கிராமவுத்தாரண சங் கத்தில் வேனிற்கால வகுப்பு மாணவர்கள் அவ்வகுப்பு ஆசிரியர் திரு. ஜெயகரன் அவர்களுக்கு ஒரு வாழ்த்து படித்துத் தந்தார்கள். அப்போது நமது ஆசிரியர் தலைமை வகித்தார். கிராம உத்தாரண த்தை விளக்கும் படியான ஒரு சிறு நாடகத்தை மாணவர்கள் நடித் துக் காட்டினார்கள். இராமசாமிக் கவுண்டர் என்ற ஒரு மாணவர் பல பெரியார்களைப் போலப் பேசிக்காட்டினர். விழா வெகு இன்ப மாக இருந்தது.

Regd. No. M. 3087.

பெரிய புராண

உரை வெளியீடு.

படங்களுடன்.

கோவைத் தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தினின்று திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., F. M. U., அவர்கள் எழுதிய உரையுடனும் பல பழயஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப் பாடபேதங்கள் முதலியவற்றுடனும் பெரிய புராண உரை வெளிவரும். சஞ்சிகை ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய 400 திருப்பாசுரங்களுக்கு பதவுரை, குறிப்புரை, புராணச்சுருக்கும், மற்றும் தேவாரங்கள், உரிய பல கண்கவரும் படங்கள், பாராயணத்தில் நிறுத்துமிடம் முதலியவற்றுடன் உயர்ந்த தாளில் ராயல் சைசில் வெளியிடப்பெறும். இவ்வாறு புராணம் முழுமையும் (10) அல்லது (11) சஞ்சிகைகளுள் முடிக்க உத்தேசித்திருக்கிறோம். இதில் திரு. முதலியாரவர்கள் நீண்டகாலமாக ஆராய்ந்து சேகரித்து வைத்திருக்கும் பல அருமையான குறிப்புகளும், நாயன்மார்களது அவதாரத் தலங்களின குறிப்புகளும் வெளிவரும். வைகாசி 23 தேதிக்குள் முன் பணம் ரூ. 1 அனுப்பிப் பெயரைப் பதிவுசெய்வோருக்கு சஞ்சிகை 1-க்கு 1—4—0-க்கு கொடுக்கப் படும். அதன் பிறகு வேண்டுவோருக்கு சஞ்சிகை 1-க்கு 1-8-0-ம் அதற்கு மேற்பட்டும் தரவேண்டிவரும். தபாற் கூலி வேறு. வேண்டுவோர் இதிற் கீழ்க்குறித்த விலாசத்திற்கு எழுதுக.

முதல் சஞ்சிகை வைகாசி-மீ சேக்கிழார் பெருமான் திருநாளன்று (5—6—35) வெளிவரும்.

S. நமசிவாயன்,
சைவப் பிரசங்கசாலை,
வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

Edited & Published by Rao Sahib C. M. Ramachandran Chettiar, Coimbatore & Printed at Shanmughasundaram at The Royal Press, Raja Street, Coimbatore, Balasundaram